Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மார்கழி 18 | (02 01 1994) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 318

## 1994: "குடும்பத்தினர் ஆண்டு"
## ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம்

1994 ஆம் ஆண்டைக் குடும்பத்தினர் ஆண்டென ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பிரகடனம் செய்துள்ளது. நாடுகள் பலவற்றில் உள்ள மக்கள்மத்தியில் குடும்ப உறவுகள் மறைந்துவருவதற்குக் காரணமாக இருக்கும் சமூகத் தாக்கத்தைத் தடுப்பது இதன் நோக்கமாகும். குடும்ப உறவுகளும் பொறுப்புகளும் என்ற தலைப்பில் புது வருடத்தில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. தேசிய, சர்வதேச மட்டங்களில் இவை நடைமுறைப்படுத்தப்படும். கலாசார மாற்றங்கள், பிரதேச நடைமுறைகள் என்பவற்றோடு மக்கள் இணைவதன் காரணமாக பாரம்பரிய குடும்ப உறவுகள் அருகிப்போகின்றன என்று சமூகவியல் நிபுணர்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்குப் போரில்

# உயர்ந்தளவு படை பலத்தைப் பிரயோகிக்க

# புதிய ராணுவத் தளபதி ஜெரிசில்வா முடிவு!

## ராணுவக் கட்டமைப்பு மாற்றமும் தேவையாம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தத்தை வெகு விரைவில் முடிவுக்குக் கொண்டுவர ஆகக்கூடிய இராணுவ பலத்தைப் பிரயோகிக்கப் போவதாக நேற்றுப் புதிய இராணுவத் தளபதியாகப் பதவி ஏற்ற லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா பத்திரிகையாளரிடம் பேசும் போது தெரிவித்தார். மேலும், இராணுவத்தின் தலைமைத்துவ கட்டுப்பாட்டு அமைப்பை மறு சீரமைப்பதன் தேவை குறித்தும், படையினருக்குத் தீவிர பயிற்சி அளிப்பது குறித்தும் அவர் வலியுறுத்தினார்.

இராணுவ தலைமையகத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்பது தொடர்பான வைபவத்தின் பின் செய்தியாளர்களிடையே பேசிய போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். ''மனித சக்தி வளமே இராணுவத்தை எதிர்நோக்கும் முக்கிய முட்டுக்கட்டையாகும். படையினரின் சேம நலன்களும் பெருமளவு முன்னேற்றப்படவேண்டும்.''

''படையினருக்கு பயிற்சி அளிப்பதும் இராணுவ தலைமைப் பீடத்தை மறுசீரமைப்பதும் தற்போது மேற்கொள்ளப்படுகிறது. யுத்தத்தில் வெற்றிபெற நவீன வாகனங்கள் உட்பட உபகரணங்கள், சாதனங்கள் என்பன முக்கியமாகும். தரைப்படையின் ஆற்றலை விருத்தி செய்ய இவை அவசியமானதாகும். கடந்தகால பின்னடைவுகள் பலவீனங்கள் ஆகியவற்றை நிவர்த்தி செய்வதும் வடக்கு-கிழக்கு யுத்தமுனையில் எதிர்காலத்தில் வெற்றி பெறவும் சகலநடவடிக்கையும் எடுக்கப்படும். பின்னடைவுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும். சகலரின் ஒத்துழைப்பு மூலமும் ஆயுதப்படைகளின் கூட்டுமுயற்சி மூலமும் நாட்டில்விரைவில் சமாதானமும் உறுதிப்பாடும் நிலைநாட்டக்கூடியதாக இருக்கும் எனவும் புதிய இராணுவத் தளபதி லெப் ஜெனரல் ஜெரிடி சில்வா தெரிவித்தார்.

இக்கட்டான காலகட்டத்தில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை பூரண

(4ஆம் பக்கம் பார்க்க)

### புதிய தளபதி பதவி ஏற்பு; சிசிலின் உருவப்படம் திறப்பு

சிறிலங்காவின் 13வது இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி. சில்வா நேற்று இராணுவத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதை, சமய அனுஷ்டானங்களுடன் கூடியவைபவமொன்றில் பதவியேற்றுள்ளார்.

காலை நடைபெற்ற இப்பதவி ஏற்பு வைபவத்தைத் தொடர்ந்து சம்பிரதாய முறைப்படி பதவி விலகிச் செல்லும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினாவின் புகைப்படம் ஒன்றை புதிய தளபதி திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வின் போது சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## சிறுபான்மையினர் என்பதற்காக யாருக்கும் அஞ்சவேண்டியதில்லை

### தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

நாம் சிறுபான்மை மக்கள் என்பதால் எவருக்கும் அஞ்ச வேண்டியதேவையில்லை. அநீதிக்குத் தலைவணங்க வேண்டியதில்லை. ஆனால் அனுசரித்துப்போகவேண்டும் இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் தொண்டமான் கண்டி சிறிசெல்வ விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுக்கிடையேயான கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது, உணர்ந்து சரியாகச் செயற்படாத அரசுக்கு எமது சக்தியை உணர்த்துவதற்காகத்தான் மத்திய மாகாண சபையில் காமினி திசாநாயக்காவை முதலமைச்சராக்குவதற்கான நடவடிக்கையில் இறங்கினோம்.

இதன்படி முதல்வர்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதாக அறிவித்தேன்.

அரசுடன் சமாதானமாக இணைந்துகொள்வதற்கு நான் தயாராக இருப்பினும் நமது மக்களின் நல மேம்பாடுகளை, அவர்களது உரிமைகளை அரசு உதாசீனம்செய்யும்பொழுது நாம் முட்டாள்தனமாக, அடிமையாக இருக்கமுடியாது.

நான், எனது மக்களுக்காக விசேடமாக எந்த உரிமையை

(4ஆம் பக்கம் பார்க்க)

## செல்லச்சாமியின்கோரிக்கை தொண்டாவால் நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் சபைக் கூட்டத்தை பிற்போடும்படி அதன் செயலாளர் செல்லச்சாமி தெரிவித்த வேளை, அதை தலைவர் தொண்டமான் நிராகரித்துள்ளார்.

பொதுச் சபைக் கூட்டம் அறிவித்தது போல நடைபெறும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

திரு தொண்டமான் பல கூட்டங்கள் நடாத்தி ஆதரவைத் தேடும் காரியத்திலும் ஈடுபட்டுள்ளார்.

## தென் மாகாணசபை கலைப்பு

றில் பதவியேற்றுள்ளார்.

காலை நடைபெற்ற இப் பதவி ஏற்பு வைபவத்தைத்

இந்நிகழ்வின் போது சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இவை அவசியமானதாகும். கடந்தகால பின்னடைவுகள் பலவீனங்கள் ஆகியவற்றை

தில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை பூரண

(4ஆம் பக்கம் பார்க்க)

முதலமைச்சராகுவதற்

மான் நிராகரித்துள்ளார்.

வைத் தேடும் காரியத்திலும் ஈடுபட்டுள்ளார்.

# புதிய ராணுவ சேவை சட்ட விதிகளில் கடுமையான ஒழுங்கு முறைகள் அமுல்!

## கடைப்பிடிக்க ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து பதவி விலகும் அதிகாரிகள் பதவி விலகியபின்னர் தமது தர நிலைகளை பயன்படுத்த முடியாது என சிறிலங்கா அரசினால் வெளியிடப்பட்ட இராணுவ சேவையின் சட்ட விதிமுறை என்ற சட்டக் கோவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இராணுவத்தின் மீது ஜனாதிபதியின் அழுத்தங்கள் அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

சமீபத்தில் வெளியான இந்த புதிய இராணுவ சட்ட விதிகளின்படி, பலபுதிய சட்ட திட்டங்கள் இராணுவத்தின் மீது நிறைவேற்றப்படும் என்று ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பதவி விலகிய இராணுவ உயர் அதிகாரிகள் ஜனாதிபதியின் அனுமதியில்லாமல் தமது தரநிலைகளை (Ranks) பாவிக்க முடியாது.

லெப்டினன்ட் பதவிக்கு மேலாகக் கொடுக்கப்படும் பதவிகளுக்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறப்படவேண்டும்.

சேவையிலிருந்து இளைப்பாறியவர் பின்னர் தமது பெயருக்கு முன்னால் இளைப்பாறியவர் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

ஜனாதிபதி மட்டுமே ஒரு இராணுவ அதிகாரியை பதவி விலகும்படியும், ஓய்வு பெறும்படியும் கேட்கமுடியும்

லெப்டினன்ட் தரத்திற்கு மேலே உள்ள அதிகாரிகள் தாமாக பதவி விலகும்போது அல்லது பதில் நியமனங்கள் பெறும்போது பதவிக் காலத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு பிறந்த வேளை படையினர் ஷெல் வீச்சு

(தொல்புரம்)

காரைநகர், மாதகல், காங்கேசன்துறைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் நேற்று முன்தினம் நள்ளிரவு புதுவருடம் பிறக்கும் வேளை துப்பாக்கி, கலிபர், பீரங்கி போன்றவற்றினால் சரமாரியான வேட்டுக்களை வான் பரப்பை நோக்கியும், தரையினை நோக்கியும் தீர்த்த வண்ணம் இருந்தனர். சுமார் 45 நிமிடங்களுக்கு மேலாக கேட்டவண்ணம் இருந்த மேற்படி வேட்டுச் சத்தங்களுடன், வானை நோக்கி துப்பாக்கி வேட்டுப் பொறிகளும், சுடர்களும் சென்ற வண்ணம் இருந்தன,

இதே வேளை புத்தாண்டு பிறந்த வேளை, பலாலி இராணுவ முகாமிலிருந்து பலத்த எறிகணைத் தாக்குதல்கள், வலிவடக்கின் மக்கள் குடியிருப்புகள் மீது நடாத்தப்பட்டன. சுமார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவீச்சில் காயமடைந்த சிறுவன் நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பகுதியில் சிறிலங்கா போர் விமானமான புக்காரா மேற்கொண்ட றொக்கற் தாக்குதலில் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தட்டாதெரு சாவகச்சேரியைச் சேர்ந்த அற்புதராசா திலீபன் (வயது 4) எனும் சிறுவன் மரணமடைந்தார். இவருடன் சேர்த்து இறந்தவர்களின் தொகை 10 ஆக உயர்ந்துள்ளது.

இதே வேளை மேற்படி தாக்குதலின் போது இச் சிறுவனின் தந்தை, சகோதரன், சகோதரி ஆகியோரும் காயமடைந்து யாழ். போதனாமருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (சி)

## திருவடிநிலை கடற்பரப்பில் மீனவர்மீது கடற்படைதாக்கு

(தொல்புரம்)

சுழிபுரம் திருவடி நிலைக் கடற்பரப்பில் விசைப்படகுகளில் ரோந்துவந்தசிறிலங்கா கடற்படையினரின் அட்டகாசத்தினால் சுழிபுரம் மேற்குப் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் சில சேதமுற்றன.

நேற்றுக்காலை 6 10 மணியளவில் திருவடிநிலைக் கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி கடற்படையினர் தமது படகுகளிலிருந்து அகோர பீரங்கித் தாக்குதலையும், கண்மூடித்தனமான கலிபர்தாக்குதலையும் மேற்கொண்டபோதுமீனவர்கள் சாதுரியமாக தப்பி கரைசேர்ந்தனர். கரை சேர்ந்த மீனவர்களை நோக்கி சுமார் அரைமணி நேரமாக தொடர்ந்து தாக்குதல் நடத்தியதில் சுழிபுரம் றாத்தலடியைச்சேர்ந்தபொன்னுத்துரை வள்ளியம்மை என்பவரின் வீடு பீரங்கித்தாக்குதலுக்கு உள்ளாகி வீட்டின் சுவர்களும், கதவுகளும்பலத்தசேதமடைந்துள்ளன. இதே இடத்தைச் சேர்ந்த நாகேசு இராசரத்தினம் என்பவரின் வீட்டின் கூரைஓடுகள் கலிபர் தாக்குத

(4ஆம் பக்கம் பார்க்க)

தென் மாகாணசபை கலைப்பு

# மாகாணசபையின் அதிகாரங்களை கைப்பற்ற ஐ. தே. க. செய்த சதி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் உள்ள யுத்தநிலைமையினால் தென் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில், அதிகளவு சனத்தொகையைக் கொண்ட மாகாணசபைகளின் அதிகாரம் எதிர்க்கட்சிகளின் வசம் இருக்கின்றமையானது எதிர் வரும் தேர்தலில் ஐ. தே. க. முகம் கொடுக்க வேண்டிய முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதனை முறியடித்து மாகாணசபைகளின் அதிகாரங்களை மத்திய அரசாங்கத்தின் கைகளுக்கு கொண்டுவரும் ஒரு முன்முயற்சியாகவே தென்மாகாணசபை கலைக்கப்பட்டது என மாகாணசபையின் முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

மாகாணசபை கலைக்கப்பட்டபின் அவர் 'சந்தேசிய' வானொலிக்கு அளித்த பேட்டியில் மேலும் கூறுகையில், தென் மாகாணசபையைக் கலைப்பதற்கு ஆளுநர் எடுத்துள்ள முடிவு சிறிலங்காவின் அரசியலமைப்புக்கு முற்றிலும் விரோதமானது.

ஜனாதிபதி பிரேமதாசவின் கொலையின் பின்னர் டி. பி. விஜேதுங்க ஜனாதிபதி பதவிக்கும், ரணில் பிரதமர் பதவிக்கும் நியமனம் பெற்றனரேயொழிய மக்களின் வாக்கினால் அல்ல

தென்மாகாணசபை உறுப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வெடித்து சிப்பாய் பலி

(கொழும்பு)

பூநகரியில் கைக்குண்டு ஒன்று வெடித்து இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார்.

கடந்ததிங்கட்கிழமை காற்சட்டைப் பைக்குள் வைத்திருந்த கைக்குண்டு திடீரென்று வெடித்ததிலேயே இவர் பலியானார். உபுல் குமார என்ற 21 வயது சிப்பாயே இறந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

## வவுனியாவிற்கு பற்றிக் நியமனம்

(வவுனியா)

பிரிகேடியர் கணுப்பான இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அதிகாரியாக சமீபத்தில் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரிகேடியர் பற்றிக் பெர்னாண்டோ வவுனியா இணைப் பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடத்தப்படுவது தொடரின்

## மாகாணசபை உறுப்பினர் சைனட் கட்ட வேண்டும்

(கொழும்பு)

தென்மாகாணத்தில் நடைபெறும் சம்பவங்களைப் பார்த்தால் மாகாணசபை ஆளுங் கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தமது கழுத்தில் சைனட் கட்டி தொங்கவிடவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்

இவ்வாறு அமரசிறி தொடங்கொட கடந்த வாரம்

(4ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## அபிவிருத்திக்குஒதுக்கியநிதி செலவிடப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கென ஒதுக்கிய பணத்திலிருந்து ஒருகோடியே எழுபது இலட்சம் ரூபா பணம் திரும்பிப் போகிறது என மட்டக்களப்பு அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

1993ஆம் ஆண்டின் அபிவிருத்திக்கென மூன்றுகோடி ரூபா பணம் ஒதுக்கப்பட்டது. இப்பணத்திலிருந்து அரைவாசிக்கும் அதிகமான பணம் திரும்பிப் போகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

புதியஆண்டு பிறந்தவேளையில் கடந்த ஆண்டுக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட பணத்தின் பெரும்பகுதி அபிவிருத்தி திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வரி விளம்பரம்


### விற்பனைக்கு

அரசாங்க, தமிழீழ விடுமுறை நாட்கள் அடங்கிய படக் கலண்டர்கள் ரூபா 6|-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்துபெற்றுக்கொள்ளலாம். மற்றும் பெரிய, நடுத்தரக் கலண்டர்களுக்கும் ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீகாந்தா அச்சகலேன், யாழ்ப்பாணம். (7065)

### பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, Jaffna. (சி-8249)

### வங்கிப் பரீட்சை

வங்கிப் பரீட்சைக்குப் பயிற்சியும் Spoken English with Grammarரும் நடத்தப்படுகிறது. விரிவுரைகள்: Kandasamy 87, திருநெல்வேலி றோட் (றயில் கடவைக்குச் சமீபமாக) கொக்குவில். (7112)

### தேவை

யாழ். சிவலிங்கப் புளியடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில் 2 பரப்பு காணி தேவை. தொடர்பு கொள்ளவும்: இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி இல. 41, பிரப்பங்குளம் வீதி, வண். பண்ணை யாழ்ப்பாணம். (7048)

திருமணம் செய்துகொள்ள விரும்பும் சொந்த தொழில் புரியும் 12-ல் செவ்வாய்வயது 34, 4-ல் செவ்வாய் வயது 32 மணமகன்கள் எம்மிடம் உண்டு. தொடர்பு கொள்ளவும்: இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி 41, பிரப்பங்குளம் வீதி, வண். பண்ணை, யாழ்ப்பாணம். (7047)

### தேவை

காணி, வீடு வாடகைக்கு கொடுக்க அல்லது விற்பனை செய்ய விரும்புவர்களும், வாங்க விரும்புபவர்களும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்: இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி இல. 41 பிரப்பங்குளம் வீதி, வண். பண்ணை யாழ்ப்பாணம். (7046)

### வெளி வந்துவிட்டது

சச்சி மாஸ்ரரின் 39 கட்டுரைகளடங்கிய ''மாணவர் கட்டுரை மலர்'' 5-ம் ஆண்டு புலமைப் பரீட்சை, 6-ம், 7-ம் ஆண்டு மாணவர்களுக்கும் சிறந்தது. விற்பனையாளர்களுக்கு கழிவுண்டு. யாழ் புத்தக நிலையம் புதிய பஸ் நிலைய அருகாமை 413, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (7088)

### சாயி பாபா
### பொக்கற் கலண்டர்'94

பாபாவின் பல்வேறு படங்கள் பொக்கற் கலண்டராக வெளிவந்துள்ளன. மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்குமிடம் பகவான் மருந்தகம் 221, நாவலர்வீதி யாழ்ப்பாணம். (சி-8234)


### கிடுகுக் கொட்டகை அமைக்கப்படும்

(தொல்புரம்)

சிறிலங்கா இராணுவ வன்முறைகளால் பாதிக்கப்பட்டு மானிப்பாய் வை. எம். சி. ஏ. கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த மாதகல் சென்ஜோசப்மகாவித்தியாலயத்திற்கு கிடுகுக்கொட்டகையிலான மண்டபம் ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

உடுவில் - மானிப்பாய் வீதியிலுள்ள காணி ஒன்றில் மேற்படி மண்டபத்தினை நிறுவிக்கொடுப்பதற்கு சண்டிலிப்பாய் பிரதேச கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் எனத் தெரியவருகிறது. (41)

### நோய் பரவல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொலரா, மலேரியா நோய் வேகமாகப் பரவி வருகிறது.

அண்மைக்காலமாக கொழும்புத்துறை மணியம்தோட்டம், வசந்தபுரம், எழிலூர், வழன்புரம், பூம்புகார், அரியாலை, கைதடிப்பகுதியில் அநேகர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (24)


### பட்டப்பின் கல்வித் தகைமை கற்கைநெறி 1992/93

பட்டப்பின் கல்வித் தகைமைக்கற்கைநெறிக்கான விரிவுரைகள் முழுநேர மாணவர்களுக்கு 1994 01-17ஆம் திகதி காலை 9.00மணிக்கும், பகுதிநேர மாணவர்களுக்கு 1994-01-22ஆம் திகதிகாலை 9.00மணிக்கும் ஆரம்பமாகும்.

கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட முழுநேர மாணவர்கள் 1994-01-20ஆம் திகதிக்கு முன் கல்விக் கிளையில் பதிவு செய்து விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கவும். இவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

1993-12-30

(சி-8261)

### யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### கலாசாலை வீதி, திருநெல்வேலி, கோப்பாய்.

## வெற்றிடம்

பதவி :- பால் நிலைய முகாமையாளர் பதவி
வேதனம் ;- 855 - 30x7 - 40x8 - 1385. இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமைகள் :- அ. கூட்டுறவுச்சங்க ஊழியர் 13-ம் சம்பளத் திட்டத்தில் முகாமை | மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 14-ம் சம்பளத் திட்டத்தில் முகாமை | மேற்பார்வை மட்டப் பதவி ஒன்றில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தர) சான்றிதழ் / பாடங்களுடன் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பால் தொடர்பான தொழில் நுட்ப அறிவுடன் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

பதவி :- விற்பனை உதவியாளர்
வேதனம் ;- 730 - 20x10 - 25x5 - 1055. இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமைகள் :- கூட்டுறவுப் பயிற்சி (சாதாரணம்) பத்திரம் க.பொ.த. (சா) பத்திரம் எண்கணிதம் / வர்த்தக கணிதம் / கணிதம் மற்றும் தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி அல்லது தொடர்புடைய துணைப்பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

பொது

வயது எல்லை :- வயது 23க்கும் 40க்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும். தற்போது கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களாக விருப்பவர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

பிணைப் பணம் :- கூ. வ. ஆணைக்குழு சட்டத்திற்கமைய சங்கம் தீர்மானிக்கும் தொகையை செலுத்துதல் வேண்டும்.

வசிப்பிடத் தகைமை :- குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பத்தோடு கல்வி, பிறப்பு, நற்சான்றுப் பத்திரங்கள் இணைத்து 18-01-94 ஆம் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

தலைவர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி, கோப்பாய். (சி-8267)


## நினைவு கூருகின்றோம்...
## 02-01-1994

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவு-கொத்தியாம்பத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஈசன்** (வைத்திலிங்கம் விக்கினேஸ்வரன்-மாமூலை, முள்ளியவளை-முல்லைத்தீவு)

மட்டக்களப்பு-தாண்டவன்வெளிப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினராற் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் வயோதிபர்,

1988ஆம் ஆண்டு அம்பாறை - அக்கரைப்பற்று பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.சந்துரு** (பொன்னம்பலம் பகீரதன் - அக்கரைப்பற்று-08-அம்பாறை

1989ஆம் ஆண்டு தேசவிரோதக் குழுவினராற் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்ட,

★ **குணம்** (சேதுபதி குணரத்தினம் - வீரமுனை, கல்முனை-அம்பாறை)

திருகோணமலை மூதூர், முட்டுச்சேனைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஆற்றில் மூழ்கியதில் எமைப் பிரிந்த,

**லெப் பாலு** (ஏகாம்பரம் ஞானசேகரம்-கூனித்தீவு, மூதூர்-திருகோணமலை)

முல்லைத்தீவு-ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப் படையினராற் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதக் குழுவினரால் வெட்டிக்கொல்லப்பட்ட 3 தமிழர்கள் சுன்னாகம் பகுதியிற் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு மன்னார்-முசல்குத்திப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.அலெக்கஸ்** (இராமலிங்கம் ரமேஷ்-இராசேந்திரங்குளம்-வவுனியா)

1993ஆம் ஆண்டு கிளாலிக்கடற்பரப்பில் பயணிகளை ஏற்றிச் சென்ற படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட 06 பெண்கள் உட்பட 15 தமிழர்கள் மற்றும் காணாமல் போன 40க்கு மேற்பட்ட தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8252)

# பிறந்தநாள் நினைவுகள்

விடுதலைத் தீயினை
முத்தமிட்டு
இலட்சிய அலையைத்
தூதனுப்பி
நீயோ
எம் நினைவுகளில்
வாழ்கின்றாய்,

உன் காந்த விழிகள் காட்டும் திசையே
- எமக்குக் கிழக்கு!

உன் முகவொளியோ
- எமக்கு சூரிய விளக்கு!

உன் இலட்சிய நதியில்
வாழ்ந்திடும் போது
தனியாக எமக்கென்று
தாகங்கள் ஏது?



# தளபதி கேணல் கிட்டு

## [சதாசிவம் கிருஷ்ணகுமார்]

மண்ணில்: 02 - 01 - 1960

விண்ணில்: 16 - 01 - 1993

சோராத விழிகளுடன்
- துணைவி -

(இ)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

நேர்மையாய் இருப்பதில் அடங்கியதே ஆட்சி
— தாமஸ் ஜெஃப்பர்யன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-01-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

## மாகாணசபை கலைப்பு எதிரணிகளுக்கு எச்சரிப்பு

தென் மாகாணசபை ஆளுநரால் கலைக்கப்பட்டு விட்டது. மாகாணசபை கலைப்பிற்கு ஆளுநர் காரணம் கூற மறுத்து விட்டாலும், மாகாண சபையின் ஆளும் கட்சியான பொதுமக்கள் ஜனநாயக முன்னணியின் முதலமைச்சருடனும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் சபைத் தலைவருடனும் கதைத்தே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அறிவித்துள்ளார்.

ஆனால், முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட, தென்மாகாணசபை கலைக்கப்பட்டமை சட்ட விரோதமான செயல் என்றும், இது ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டமிட்ட செயல் எனவும் குற்றம் சாட்டியுள்ளார். இந்நிலையில், ஆளுநரின் கூற்றுக் குறித்து சந்தேகமே எழுகின்றது. இந்நவகையில் ஆளுநர் அரசாங்கக்கட்சியின் கைப்பாவையாகச் செயற்பட்டுள்ளார் என்றே கொள்ள வேண்டும்.

ஆளுநர் காரணம் கூற மறுத்தாலும், தென் மாகாணசபையில், வரவு-செலவு திட்டம் நிறைவேற்ற முடியாமல் போனதினால் எழுந்த நெருக்கடி நிலையே ஆட்சி கலைப்பதற்குக் காரணம் என்ற ஒரு நிலையை உருவாக்குவதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமாக இருந்துள்ளமை வெளிப்படையாகத் தெரிகின்றது அதாவது, தென்மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரைக் கடத்திச் சென்று ஐக்கிய தேசியக் கட்சி தனது அரசியற் குறிக்கோள் ஒன்றை நிறைவு செய்துள்ளது.

தென் மாகாண சபை ஆளும்கட்சி உறுப்பினர், மத்திய மாகாண சபை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் கடத்தப்பட்ட போதே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இல்லாத மாகாணங்களில், டி. பி. விஜேதுங்க அரசாங்கம் ஆட்சிக்கவிழ்ப்பு, அல்லது கலைப்பு நடவடிக்கையில் ஈடுபடலாம் என எதிர்வு கூறப்பட்டது. இந்த வகையில் தென் மாகாணசபையில், இடம் பெற்றுள்ள ஆட்சிக்கலைப்பானது அரசியல் விமர்சகர்களின் கணிப்பை சரி செய்வதாகவே இருந்துள்ளது. இது சிறிலங்காவின் எதிர்கால அரசியலுக்குக் கட்டியம் கூறுவதாகவும் உள்ளது.

# அரசியல் தீர்வு காணும்வரை தேர்தல் நடத்தக் கூடாது

-அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட்டு அமைதி நிலைநாட்டப்படும் வரை வடக்கு கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு தேர்தலையும் நடத்தக் கூடாது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அமைதி ஏற்படும்வரை எந்தத் தேர்தலையும் நடத்தக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். ஆனால் கிழக்கு மாகாணத்தில் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஐக்கிய தேசிய கட்சியினரை மாத்திரம் வெளியுலகிற்கு காட்ட முற்பட்டால் முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். மட்டக்களப்பு கூட்டுறவுச் சங்கத் தலைவர் தேர்தல்பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு நடத்தப்படவில்லை. வடக்கு கிழக்கில் 25 வருடங்களாக குடிசன மதிப்பீடும் நடத்தப்படவில்லைஎன்று கொள்கை, திட்டமிடல் இராஜாங்க அமைச்சரான கலாநிதி விமல் விக்கிரமசிங்கவே பாராளுமன்றத்தில் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டார். இத்தகைய சூழ்நிலை இருக்கையில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை அங்குநடத்துவது சாத்தியமா என்பதை அரசாங்கம் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை என்றார்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'கெயர்' ஒருமில்லியன்உதவி

(யாழ்ப்பாணம்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கெயர் ஒரு மில்லியன் ரூபாவை உதவி அளிக்க உள்ளதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும்படி அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கெயரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க கெயர் ஒரு மில்லியன் ரூபாவுக்கு உதவி அளிப்பதாக அவருக்கு உறுதியளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## இவ்வருடம் 30லட்சம் மக்கள் காசநோயால் இறக்கலாம்

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

காசநோயால் இவ்வருடம் 30லட்சம் மக்கள் இறக்கலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இப்போது காசநோய் அதிக உயிர்களைப் பலிகொள்ளும் ஒரு தொற்று நோயாக மாறியுள்ளது. இந்நோயால் இறப்பவர்களை விட மேலும் 80லட்சம் பேருக்கு இந்நோய் தொற்றும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கறுப்பு ஆபிரிக்க பிரதேசத்தில் வாழ்வோரே அதிகளவில் இந்நோய்க்கு ஆளாகின்றனர். இவர்கள் உலக சனத்தொகையின் 10வீதமாக இருந்தாலும் முழு உலகிலும் காசநோயால் இறப்போரில் 18வீதமானவர்கள் கறுப்பு ஆபிரிக்க பிரதேசத்தில் வாழ்பவர்களாகவேயுள்ளனர்.

அமெரிக்காவில் இந்நோய் வருடத்திற்கு 5முதல் 7வீதம் வரை குறைந்து வந்தது. எனினும் 1985உடன் இந்நிலைமை மாறியது இப்பொழுது அங்கு நோய் முன்னைய வீதத்தில் குறைந்திருந்தால் இருக்க வேண்டிய நோயாளிகளை விட 39ஆயிரம் நோயாளிகள் மேலதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வாழைகளுக்கு நஷ்டஈடு

யாழ். குடாநாட்டில் அண்மையில் ஏற்பட்ட பெரும் காற்றுடன் கூடிய பெருமழையால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான வாழைத் தோட்டங்களுக்கு நஷ்டஈடு வழங்க யாழ். மாவட்ட விவசாயத்திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### அலுவலக திறப்பு விழா

பருத்தித்துறை வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் ஜனவரி மாத நடுப்பகுதியில் நெல்லியடியில் திறந்து வைக்கப்படுமென பருத்தித்துறை வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாகப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பருத்தித்துறை ஆகிய பிரிவுகளுக்கு வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்கள் திறக்கப்படுமென அறிவித்திருந்தது.

யாழ் மாவட்ட சனசமூக நிலைய

## சம்மேளனம் நடத்திய பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் கடந்ததிங்களன்று யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் பாலர் பிரிவில் முதலாமிடத்தை செல்வி கமலினி சிவஞானமும் (சுழிபுரம்), இரண்டாமிடத்தை செல்வி பிரியதர்சினி பன்னீர்செல்வமும் (கோப்பாய்), மூன்றாமிடத்தை செல்வி கோமதி நிரஞ்சனும் (சுழிபுரம்), நான்காமிடத்தை செல்வன் சிவராஜிஸ்வரன் நிரோஷனும் (நவாலி வடக்கு), ஐந்தாமிடத்தை செல்வி சிந்துஷா சண்முகநாதனும் (சுழிபுரம்) பெற்றுள்ளனர்.

ஆரம்ப பிரிவு போட்டிகளில் முதலாமிடத்தை செல்வி நிருஷா இராமச்சந்திரனும், (தெல்லிப்பழை) இரண்டாமிடத்தை செல்வி சிவப்பிரியா சிவபாதரத்தினமும் (தெல்லிப்பழை), மூன்றாமிடத்தை செல்வி நிரஞ்சனி கார்மேகராசாவும் (சுழிபுரம்), நான்காமிடத்தை இராசரத்தினம் சுதர்சனும், ஐந்தாமிடத்தை சிவஞானம் பாலசுதன், நிசாந்தி நாகநாதனும் (சுழிபுரம்) பெற்றுள்ளனர்.

கீழ்ப்பிரிவு போட்டியில் முதலாமிடத்தை தி. நிஷாந்தனும் (அரியாலை), இரண்டாமிடத்தை சிவபாதரத்தினம் சிவரூபனும் (தெல்லிப்பழை), மூன்றாமிடத்தை நடராசா சிவரூபனும் (சுழிபுரம்), நான்காமிடத்தை கைலைப்பிரியா மாயாக்கிருஷ்ணனும் (சுழிபுரம்), ஐந்தாமிடத்தை சர்மிளா சற்குணநாதனும் (சுழிபுரம்) பெற்றுள்ளனர்.

மத்திய பிரிவு போட்டியின் முதலாமிடத்தை பி. நளினாவும் (அரியாலை), இரண்டாமிடத்தை கந்தையா ராகுலனும், மூன்றாமிடத்தை யோகராசாசிவகரனும் பெற்றுள்ளனர்.

மேற்பிரிவு போட்டியில் முதலிடத்தை சுதாமதி சந்தோசமும், இரண்டாமிடத்தை குணரத்தினம் குணசிலனும் பெற்றுள்ளனர்.

அதி. மேற்பிரிவில் முதலாமிடத்தை காந்தரூபி ஏரம்பமூர்த்தியும், இரண்டாமிடத்தை வினோதினி விஜயரத்தினமும், மூன்றாமிடத்தை தேவானந்தனும் பெற்றுள்ளனர்.

## வீதியோர வியாபாரத்தால் போக்குவரத்துக்கு சிரமம்

(நமது நிருபர்)

உரும்பராய் பகுதியில் வீதியோர சந்தை வியாபாரத்தினால் காலை வேளைகளில் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல மாதங்களாக உரும்பராய் சந்தியை அண்டி மானிப்பாய் பிரதான வீதியின் இருமருங்கிலும் நின்று காலை வேளையில் மீன் வியாபாரம் நடைபெறுகிறது இதனால் இதனை வாங்கும் மக்கள் அவர்களைச் சூழ குழுமி நிற்பதால் சிலமணி நேரங்களுக்கு அவ்வீதியால் வாகனங்களோ பொதுமக்களோ செல்ல முடியாத நிலை தினமும் ஏற்படுவதாகவும் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பயணம் செய்ய வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சற்றுத் தொலைவில் உரும்பராய் சந்தை அமைந்துள்ள போதிலும் பிரதான வீதியின் நடைபாதையில் இம்மீன் விற்பது ஏன்எனப் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

## குற்றவாளிகள் தண்டிப்பில் அரசு உறுதியாக உள்ளது

- மன்மோகன்சிங்

பங்குப்பத்திர ஊழலில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் மிக உறுதியோடு இருப்பதாக நிதி அமைச்சர் மன்மோகன் சிங் பாராளுமன்றத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விடயம் தொடர்பா

## இஸ்ரேலுடனான பேச்சுக்களில் மீண்டும் முட்டுக்கட்டை நிலை

இஸ்ரேலுக்கும் பாலத்தீன விடுதலை இயக்கத்திற்கு மிடையே கையெழுத்திடப்பட்ட அமைதி ஒப்பந்தத்தை மேற்குக்கரை வரையான பகுதியும், யாருடைய கட்டுப்பாட்டில் இருப்பது என்பது தொடர்பான விவகாரமே முட்டுக்கட்டை நிலைக்குக் காரணமாகும்.

இது சிறிலங்காவின் எதிர்கால அரசியலுக்குக் கட்டியம் கூறுவதாகவும் உள்ளது.

இதேவேளை டி. பி. விஜேதுங்க அரசாங்கமானது இவ் ஆட்சிக் கவிழ்ப்பிற்கும் தனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என சாதிக்க முற்படுவது ஏற்கக்கூடிய தொன்றல்ல. ஏனெனில் தென்மாகாணசபை உறுப்பினர் விமால் பிரான்ஸிஸ்கோ கடத்தப்பட்டு இரு வாரங்களுக்கு மேல் கடந்துள்ளது. அரசாங்கம் நேர்மையாகச் செயற்படுவதாக இருந்தால் இதுவரையில் கடத்தப்பட்டவரைத் தேடிக் கண்டுபிடித்திருக்க வேண்டும் அல்லது கடத்தப்பட்டவர் கண்டுபிடிக்கப்படும் வரையாவது மாகாணசபை ஆட்சியைத் தொடர அனுமதித்திருக்க வேண்டும். கடத்தப்பட்டவர் கண்டுபிடிக்கப்பட்டபின், அவரின் நிலைப்பாட்டை அறிந்து அடுத்த கட்ட நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். இதுவே ஒரு அரசின் கடமையும் பொறுப்பும் ஆகும்

இதைத் தவிர்த்து விட்டு கடத்தப்பட்டவர் என்ன ஆனார் என்பதைப் பற்றியே ஒரு பொறுப்புமற்றவர்கள் போல் நடந்து கொண்டு ஆட்சியைக் கலைப்பது என்பது, திட்டமிட்ட சதிவேலை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதில் தவறு ஏதும் இல்லை. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு எதுவித விளக்கத்தையும் கூறிவிடவும் முடியாது. இக்குற்றச் சாட்டில் இருந்து தப்பிக்கொள்ளவும் முடியாது.

இதேவேளை அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்நடவடிக்கையானது, எதிர்க்கட்சிகளுக்கு எதிர்கால அரசியல் குறித்து பலமான ஓர் எச்சரிக்கையாகும். இந்த வகையில், மேல் மாகாணசபை, வடமேல் மாகாணசபை என்பனவற்றில் அரசாங்கம் புதிய நடவடிக்கைகளைத் தொடரலாம், இதேவேளை, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இதுவரை அரசிற்கு ஆதரவளித்து வந்த இ. தொ. கா. உறுப்பினர்களுக்கும் இவ் ஆபத்துக்கள் உருவாகலாம்.

மறுவளமாக டி. பி. விஜேதுங்கவின் இவ்ஜனநாயக விரோத நடவடிக்கையானது சிறிலங்கா அரசியலில் பெரும் கொந்தளிப்புக்களை உருவாக்கக் கூடும். இந் நிலையில், எதிர்க்கட்சிகள் தமக்குள் ஒரு பொதுவான இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். அவ்வாறு இல்லாமல் கடந்த காலத்தினைப் போன்றே தமக்குள் முரண்பட்டுக் கொண்டிருப்பார்களேயானால் பெரும் பின்னடைவுகளையும் அச்சுறுத்தல்களையும் சந்திக்க வேண்டி வரும். இது ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் சிறிலங்கா அரசாங்கத்தை தனது சர்வாதிகாரத்தனத்தினால் ஆட்சி புரிவதற்கு உதவுவதாகவே இருக்கும்.

---

உறுதியோடு இருப்பதாக நிதி அமைச்சர் மன்மோகன் சிங் பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார். பங்குபத்திர ஊழல் தொடர்பான பாராளுமன்ற கூட்டு விசாரணைக் குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் யில், இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அது பற்றிய விபரம் சில மாதங்களில் சபைக்குத் தெரிவிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## பாராளு.குழு அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்படும்

**- பி. வி. நரசிம்மராவ்**

பங்கு பத்திர ஊழல் தொடர்பான பாராளுமன்ற கூட்டு விசாரணைக் குழுவின் அறிக்கை மீது தேவையான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என்று இந்தியப் பிரதமர் பி.வி நரசிம்மராவ் கூறியுள்ளார்.

இந்தியப் பாராளுமன்றத்தில் இந்த அறிக்கை மீதான விவாதத்தின்இறுதியில்பேசிய அவர் மேலும் கூறுகையில் சபையில் நடைபெற்ற விவாதம் இவ் விடயத்தில் உறுப்பினர்களின் கருத்துக்களை அரசாங்கம் அறிந்து கொள்வதற்கு உதவியதாகவும் அறிக்கையை விரிவாக ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

## பிரிட்டன் தூதுவரை சூடான் வெளியேற்றியது

(டில்லி)

சூடானிலுள்ள பிரிட்டன் தூதுவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு சூடான் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. சூடான் அரசை குறை சொல்லும் கருத்துக்களை பிரிட்டனின் தூதுவர் தனிப்பட்டமுறையில் நடந்தபேச்சுக்களின்போதுவெளியிட்டதாக சூடானிய சிரேஷ்ட அமைச்சர்கள் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சூடானின் தென்பகுதியில் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள கிறித்தவ தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்கு கன்டர்பெரி அதிமேற்றிராணியார் விஜயம் செய்தமை தொடர்பாக சூடான் அரசு அதிருப்தி கொண்டுள்ளமை தெரிந்ததே.

## மணிப்பூர் சட்டசபை மத்திய அரசால் கலைப்பு

மணிப்பூர் மாநிலத்தில் ராஷ்டிரபதி ஆட்சி அமுலுக்கு வந்துள்ளது சட்டப்பேரவையின் கூட்டத்தொடர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு மோசமடைந்திருப்பதால்மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது என உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மணிப்பூரில் பல இனமக்களிடையே ஏற்பட்ட உட்பூசல்களினால் அண்மையில் பல மக்கள் இறந்தனர். திரு. பி. பி. சில்வஸ்ரபா ஆளுநரின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

மிடையே கையெழுத்திடப்பட்ட அமைதி ஒப்பந்தத்தை அமுலாக்குவது தொடர்பாக இசைவான கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் பேச்சுக்களில் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டுள்ளது

இதனால் காஸா நிலப்பகுதியில் இருந்தும், ஜெரிக்கோ கெரப்பகுதியில் இருந்தும்இஸ்ரேலிய துருப்புக்களை மீளப் பெறுவது மேலும் தாமதமாகலாம் எனக் கூறப்படுகிறது.

காஸா முதல் கெய்ரோ வரையான பகுதியும் ஜெரிக்கோ முதல் ஜோர்டான்

---

## அமெரிக்கா

### வற்புறுத்தக்கூடாது

சர்ச்சைக்குரிய அணுசக்தி நிலையங்கள் தொடர்பாக எழுந்துள்ள பிணக்கை தீர்ப்பதற்கு. அமெரிக்காவுடன் அண்மையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை உதவும் என்று வடகொரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்வற்புறுத்தல்கள் அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டால் அது அழிவிற்கே வித்திடுமென்று அமெரிக்காவிற்கு தெரிவித்துள்ளார்.

திரு. கிம் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் வடகொரியாவின் அணுசக்தி அபிவிருத்தித்திட்டம் தொடர்பாக அமெரிக்கா கட்டுக்கதை ரீதியான சந்தேகங்களை உருவாக்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

---

ப்பாட்டில் இருப்பது என்பது காரணமாகும்.

## நிதியமைச்சர் ராஜினாமா பிரதமர் ராவ் ஏற்க மறுப்பு

(டில்லி)

இந்திய மத்திய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங்கின் பதவி விலகல் கடிதத்தை பிரதமர் திரு. பி. வி, நரசிம்மராவ்ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.

இது சம்பந்தமாக டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு பிரதமர் எழுதியுள்ள கடிதத்தில் அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்த பின் இந்த ராஜினாமாவைத் தான் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

பங்கு பத்திர ஊழல் குறித்து விசாரித்த கூட்டு நாடாளுமன்ற குழு அறிக்கையில் நிதி அமைச்சரின் செயற்பாட்டை குறை கூறியிருப்பதை அடுத்து மன்மோகன் சிங் கடந்த 23ஆம் திகதியன்று தமது பதவி விலகல் கடிதத்தை அளித்திருந்தார்

## அரச வாகனங்களை பயன்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு தேர்தல் கமிஷன் கட்டுப்பாடு

(டில்லி)

தேர்தல் பிரசாரங்களுக்காக ஹெலிகொப்ரர்கள், கார்கள் மற்றும் அரசவாகனங்களையும்இலவசரயில்வே அனுமதிச்சீட்டையும் பயன்படுத்துவதற்கு இந்திய தேர்தல் கமிஷன் முழுத் தடை விதித்துள்ளது.

எனினும் பாதுகாப்புக் கருதி பிரதமமந்திரிக்கு மட்டும் இந்தத்தடையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பற்றி பத்திரிகைகளில் செய்தி வெளியாகும் தேதியிலிருந்து தேர்தல்நடைபெற்று முடியும் நாள்வரை இந்தத்தடை அமுலில் இருக்குமென மத்திய அமைச்சரவைச் செயலர், உள்துறை செயலர், எல்லா மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் தலைமைச் செயலர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தேர்தல் கமிஷன் குறிப்பிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இந்த தடைபற்றி அறிவித்து தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கை. பற்றி தேர்தல் கமிஷனிடமும் தெரியப்படுத்தும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

சிவில் விமானத் துறைச் செயலருக்கும் ரயில்வே பகுதி செயலருக்கும் தனியாக கடிதம் எழுதியுள்ள கமிஷன் தேர்தலின் போது இலவச அனுமதிச்சீட்டுக்களைவழங்க வேண்டாம் என உத்தரவிடுமாறும் கேட்டுள்ளது. இந்தத் தடையிலிருந்து சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கும் ஏஜென்டுகளுக்கும்விலக்களிக்கப்பட்டுள்ளது.

---

## திசைமாற்ற நடவடிக்கை

(வாஷிங்டன்)

ரஷ்யாவை நோக்கி வைக்கப்பட்டுள்ள அணு ஏவாயுதங்களை நிறுத்திவைக்கும் திட்டத்தை மாற்றுவது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது. கம்பியூட்டர் மூலம் இந்த ஏவாயுதங்களின் திசையைத் திருப்ப முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

## விசேட பொதுச்சபைக் கூட்டம்

அன்புடையீர் !

காலம்: 09 01-1994 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: காலை 10 மணி

இடம் : யாழ். வர்த்தகர் சங்க பணிமனை
21, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கலந்து கொள்கின்றனர். மிக முக்கிய விடயங்களை ஆராய்ந்து தீர்மானம் எடுக்க விருப்பதால் அனைத்து பொதுச் சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மு. குறிப்பு:- வரஇயலாத உறுப்பினர்கள் ஸ்தாபனத்தை மூடியாவது அல்லது பொறுப்பாளரையாவது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

நன்றி

மு. பத்மநாதன்
'செயலாளர்.

(சி8259)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பின்வரும் பீடங்களில் கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் 1992/93 கல்வியாண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாக உள்ளன.

மருத்துவபீடம் (புதிய மாணவர் உட்பட) -1994-01-03
கலைப்பீடம்; 2-ம், 3-ம், 4-ம் வருடம் -1994-01-17
புதிய மாணவர் -1994-02-07
சித்த மருத்துவம் (புதிய மாணவர் உட்பட) -1994-01-17
விவசாயபீடம் (புதிய மாணவர் உட்பட) -1994-01-17
விஞ்ஞான பீடம் (கணனி விஞ்ஞான ஆரம்ப பயிற்சி நெறி புதிய மாணவர்களுக்கு மட்டும்) 1994-01-03

மாணவர்கள் மேற்குறிப்பிட்ட திகதிகளில ஆரம்பமாக உள்ள விரிவுரைகளுக்கு தவறாது சமூகமளிககுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவாளர்

(சி-8257)



## யாழ்ப்பாணக் கல்லூரி

பட்டதாரிப் பிரிவு

(1) பேராதனை பல்கலைக்கழக 1994/95 கல்விஆண்டுக்கான வெளிவாரி விஞ்ஞான



ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாராவின்

உணவுப்பார்சல்களை (மீன், மரக்கறி, இறைச்சி)
தினமும் காலை 11.45 முதல் பிற்பகல் 3.30 மணிவரை
பெற்றுக் கொள்ளலாம்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை
சுண்டுக்குளி. (சி-8187)



ESTD:-1973 REGD:-No 1/7999

## The Express Institute

IRUPALAI - KOPAY

### கல்வி ஆண்டு 1994 க்கான புதிய வகுப்புகள்

அனுமதி பெறுவதற்கான முடிவு திகதி இம்மாதம் 10 ஆம் திகதி வரை மட்டுமே நீடிக்கப்பட்டுள்ளது

- அதிபர்

(சி-8268)



நீங்காத நினைவுகளில்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் மயிலு நாகராசா (வன்னி)

தோற்றம் : 1948-0?-18 மறைவு: 1993-01-1?


கிளி. விவசாய பீடத்திற்கு

# திணைக்கள ஊழியர் அனுமதிபற்றி ஆராயப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு அரச திணைக்கள உத்தியோகத்தர்களையும் கற்கைநெறிக்காக அனுமதிப்பதற்கு மீண்டும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இம் முயற்சி தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மூதவை மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது

இப்பீடத்திற்கு அரசாங்க விவசாய திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை அனுமதிப்பது தொடர்பாக இறுதி நடவடிக்கையாக இது அமையும். இப்பீடத்திற்கு அனுமதிக்கும் மாணவர் தொகையில் சுமார் பத்து வீதமான அனுமதிகள் இத்திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இவ் அனுமதி தொடர்பாக பல்கலைக்கழக மூதவை ஆரம்பத்தில் மேற்கொண்ட முயற்சிகளுக்கு விவசாய பீடத்தில் உள்வாரி மாணவர்கள் கடுமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்தனர்.

இதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய கல்வியாண்டில் மேற்படி அனுமதிகள் மேற்கொள்ளப்படுவதற்கான சாத்திய கூறுகளை அவதானிக்க முடிகின்றது

## 1994: குடும்ப

தெரிவித்துள்ளனர். மேற்கு நாடுகளில் ஒரே குடும்பம் என்ற நிலை மாறிவிட்டது

இந்த நிலையைத் தவிர்ப்பதற்கென குடும்பத்தினர் ஆண்டு என ஓர் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என 1989 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உடன்பட்டுக்கொண்டது. ஐ நாவின் சமூக அபிவிருத்தி மனித விவகார நிலையம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது. எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரே குடும்பமாக வாழ்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதத்தில் அதற்குரிய சூழ்நிலை உருவாக்கப்படமுடியும் என்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது ஒரே குடும்பம் எனும் வாழ்க்கை நிலையைச் சீர்குலைக்கும் சக்திகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசாங்க மட்ட ஆதரவு தேவையென ஐ நா வலியுறுத்தியுள்ளது.

## திருவடிநிலை

லுக்குள்ளாகி சேதமடைந்துள்ளன. அவ்விடத்துக்கு சற்றுமுன்னால்உள்ள பனைத் தோட்டங்களில் சில பனைகள் முறிந்த நிலையிலும். பல சேதமுற்ற நிலையிலும் காணப்படுகின்றன.

இதேவேளை காரைநகர் கசூர்னாபிச் நிலைகளிலிருந்து கடற்படையினருக்கு உதவியாக பொன்னாலை, சுழிபுரம் கரையோரப்பகுதிகளை நோக்கி எறிகணைகள் ஏவப்பட்டன. இவை அனேகமாக கடலில்வீழ்ந்து வெடித்ததாக தெரியவருகிறது. (41)

## உயர்ந்தளவு

விருப்புடன் கடமையாற்றுவேன் என்றும் அவர் தெரிவி

## மாகாணசபையின்

பினரைக் கடத்திக் கொண்டு சென்றமை, புதிய ஆளுநரை நியமித்தமை, எதிர்க்கட்சிகளின் பலத்தை உடைக்க நடவடிக்கை எடுத்தமை என்பன தென்மாகாணசபையைக் கலைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பது வெளிப்படை.மாகாண சபையைக் கலைக்க முதல் அமைச்சரின் சம்மதம் பெறப்படவேண்டும் என அரசியல் யாப்பில் தெளிவாக உள்ளது ஆனால் இவ் விதிமுறைக்கு மாறாக ஆளுநர் நடந்துள்ளார்.

சபையின் வரவு செலவுத் திட்டம் வருட இறுதிவரை நிறைவேற்றப்பட முடியாமல் போனதற்கு முன்னாள் ஆளுநரே முக்கிய காரணம் மாகாண சபைக்கு நாம் மே மாதம் தெரிவு செய்யப்பட்ட போதிலும் அக்டோபர் மாதம் வரை நாம் ஆட்சியமைக்க வழி செய்யப்படவில்லை. இதனாலேயே வரவு செலவுத் திட்டம் ஒத்திப் போடப்பட்டது

இதன் பின்னர் எமது உறுப்பினர் ஒருவர் குடும்பத்துடன் கடத்தப்பட்டார். அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஏற்ப மாகாணசபை விதிகளுக்கு அமையவும் நாம் குறைநிரப்புப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தோம் அதனைச் சபை முதல்வர் ஏற்றுக் கொள்ள வேண்டும். முன்னர் தென்மாகாண சபையே இவ்வாறு நிதியைப் பெற்றுள்ளது

தென்மாகாண சபையில் அங்கம் வகிக்கும் எமது உறுப்

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் விசேட பொதுக்கூட்டம்ஒன்று இன்று முற்பகல் 10.30 மணியளவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் தலைவர் சட்டத்தரணி திரு.சி. இராசேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## சிறுபான்மை

யும் கேட்கவில்லை. இந்த நாட்டில் ஏனைய மக்களுக்கு இருக்கும் உரிமையைத்தான் கேட்கிறேன். பிறந்த அன்றே இறப்பும் உறுதியாகி விடுகின்றது. நான் மரணமாவது ஒருமுறைதான் என்று குறிப்பிட்டார்.

## மாகாணசபை

காலியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போது குறிப்பிட்டார் அவர் தொடர்ந்து பேசும் போது,

ஏற்கனவே கடத்திச் செல்லப்பட்ட உறுப்பினருடன் இன்னொரு உறுப்பினரும் கடத்திச் செல்லப்பட இருக்கின்றார் என்று செய்தி கிடைத்துள்ளது.

கடத்தல்கள் தொடர்ந்தால் சைனைட் அருந்தி தற்கொலை செய்துகொள்ளுமாறு எனது உறுப்பினர்களுக்கு நான் கூற வேண்டிய நிலை ஏற்படும் என்றார். இதேவேளை இம்மாகாண சபை கலைக்கப்பட்டு விட்டமை குறிப்பிடத்தக்கது.

பினர்கள் எவரும் அனுராவின் ஆதரவாளர் அல்ல. இதனை அவர்கள் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளனர். கடத்தப்பட்ட விமல் பிரான்ஸிஸ் தன்னைக் காப்பாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு மாகாண சபையைக் கலைக்க ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டு செயற்பட்டுள்ளது. தொடர்ந்தும் இவ்வாறு நடப்பதற்கு இடம் கொடுக்காதிருக்க நாம் நீதிமன்றம் செல்லவுள்ளோம்.

இதேவேளை மத்திய மாகாண சபையில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரம் பறிக்கப்பட்டால் மேல்மாகாணசபை, வடமேல் மாகாணசபைகளுக்கும் ஆபத்து உண்டாகும்.

மேலும் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மாகாணசபைகளையே இல்லாதொழிக்க அரசாங்கம் திட்டமிடுகிறது என்றார்.

(1) பேராதனை பல்கலைக்கழக 1994/95 கல்விஆண்டுக்கான வெளிவாரி விஞ்ஞான மாணி முதற்தேர்வு (1st in Science (B. Sc) ) வகுப்புகள் 03 - 01 - 1994 பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகின்றன.

குறிப்பு : i பின்வரும் பாடங்களில் ஏதாவது மூன்றினை தெரிவு செய்யலாம்:

1) தூயகணிதம் 2) பிரயோககணிதம்
3) புள்ளிவிபரவியல் 4) பொருளியல்

ii. க பொ. த உயர்தரப் பரீட்சையில் ஏதாவது 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

iii. விண்ணப்பிக்கும் திகதி

03.01.1994

2. பேராதனை பல்கலைக்கழக 1994/95 கல்வியாண்டுக்கான G. A. Q. (கலை முதற்தேர்வு) வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன (ஆங்கில இலக்கியம் உட்பட).

3. B. A. Part - I

**ஆங்கில இலக்கியம்**

ஆரம்பம் : 08.01.1994

மு. ப. 10.30 மணிக்கு

**மெய்யியல்**

ஆரம்பமாகி விட்டன

பின்வரும் பாடநெறிகள் *15-01-1994*

ஆரம்பமாகின்றன.

1. தமிழ்
2. பொருளியல்
3. அரசியல் விஞ்ஞானம்
4. இந்து நாகரிகம்
5. கிறிஸ்தவ நாகரிகம்

ஏனைய கற்கை நெறிகள்

*14-01-1994* ஆரம்பமாகும்.

விபரங்கட்கு:

**யாழ்ப்பாணக் கல்லூரி**

பட்டதாரிப்பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம். (சி-8269)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

## அமரர் மயிலு நாகராசா (வன்னி)

தோற்றம் : 1948-02-19

மறைவு : 1993-01-13

நீங்கள் சென்று ஓராண்டு ஆனதய்யா
உங்கள் நினைவுகளோ ஓர் நிமிடம் ஓயவில்லை
அன்பு மனைவி அசுவதமோ கதறியழுதாறவில்லை
பெற்ற தாய் பிள்ளையம்மா பெருந்துயரில்
மீளவில்லை
பிள்ளையவள் சிந்துயா இங்கு அப்பாவென்று
ஆறவில்லை
எப்படித்தான் சென்றீர்களோ எங்களை விட்டு
உங்களை வன்னியென அழைத்தவர் எல்லாம்
வாயடைந்து நிற்கின்றனர் அங்கே
வன்னியொரு நிழல் என சாய்ந்த பின்பே
நாம் அறிந்தோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம் இறைவனையே !

சாந்தி ! சாந்தி ! சாந்தி !

மகாத்மா வீதி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

மனைவி, மகள், தாய், உற்றார்,
உறவினர் நண்பர்கள்.

(7105)

## மரண அறிவித்தல்

### திருமதி தர்மராஜதுரை சற்குணவதி

தும்பளை, மணல் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி தர்மராஜதுரை சற்குணவதி (01-01-1994) நேற்று காலமானார். அன்னார் திரு க.வை. தர்மராஜதுரை (ஓய்வுபெற்ற தீயணைப்பு அதிகாரி, சவூதி அரேபியா) யின் அன்பு மனைவியும் திரு. வை த. குணராசன் (V. T K R. Recording Bar, பருத்தித்துறை உரிமையாளர்), திருமதி முரளிதரன் தேவகியின் அன்புத் தாயாரும், திருமதி ரஜனி குணராசன், திரு. முரளிதரனின் அன்பு மாமியாரும், திரு. ச. கணேசமூர்த்தி (கொழும்புத் துறைமுக அதிகாரி) காலஞ்சென்ற பா. ஜெயமணி தேவியின் அன்புச் சகோதரியும், செல்வன் ரவிசங்கர் (நனன், போராளி), பா. குமுதினி, பா. சுபோதினியின் பெரிய தாயாரும், நர்மிளா, தனேஷ்குமார், பிரசாந்த், பிரதீப், ஆரணியின் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (02-01-94) ஞாயிற்றுக்கிழமை காலை 11-30 மணியளவில் பருத்தித்துறை மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். தயவு செய்து இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மணல் ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை. (7115)

V.T. குணராசன் (மகன்)
(V. T. K. R. Recording Bar
உரிமையாளர்)

**உயர்ந்தளவு**

விருப்புடன் கடமையாற்றுவேன் என்றும் அவர் செய்தியாளர் மாநாட்டில் உறுதியளித்தார்.

**புதிய**

தின்போது வழங்கப்பட்ட பதவி நிலைகளை ஜனாதிபதியின் அனுமதியின்றி பயன்படுத்த முடியாது. ஜெனரல், கப்டன் தரத்திலிருந்து ஓய்வு பெறும் அதிகாரிகள் தமது ஓய்வின் பின் ஓய்வு பெற்றவர் என்பதை சுட்டிக்காட்டி தமது பதவி நிலையை பயன்படுத்த முடியும்.

இராணுவத் தளபதியாக இருந்தவர்களுக்கு 2ஆம் லெப்டினன்ட், கப்டன் தரத்திலான பதவிகளும் வழங்கப்படலாம் ஆனால் வர்த்தமானி மூலம் அவை தெரியப்படுத்தவேண்டும். இராணுவ அதிகாரிகளை பதவி விலக்கவோ, பதவி உயர்த்தவோ ஜனாதிபதிக்கே உரிமையுண்டு என இராணுவ சட்டக்கோவையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி பதவியிலிருந்துலெப் ஜெனரல்சிசில் வைத்தியரட்ன ஓய்வுபெற்றுள்ள இவ்வேளையில் இப்புதிய இராணுவ சட்டக்கோவையும் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**புத்தாண்டு**

10க்கு மேற்பட்ட எறிகணைகள் வரை ஏழாலை, மல்லாகம், அளவெட்டிப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

ஏழாலை மத்தியிலும், மல்லாகம் பகுதியிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இதேவேளை, வலி வடக்கின் இராணுவக் காவலரண்களிலிருந்தும் ''பரா'' வெளிச்சத்துடன் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதல்களினால் சேதமெதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை.

(09), (11), (41)

சபையே இவ்வாறு நிதியைப் பெற்றுள்ளது.

தென்மாகாண சபையில் அங்கம் வகிக்கும் எமது உறுப்

கெடுப்பு ஒன்றின் மூலம் மாகாணசபைகளையே இல்லா தொழிக்க அரசாங்கம் திட்டமிடுகிறது என்றார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 01 - 01 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 22

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

26-2786, 24-9938, 24-0951, 24-9773, 24-1259
28-4545, 24-3071, 24-5137, 42-9326, 22-6897
26-3294, 26-6320, 24-6211, 43-4045, 41-9663

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-6983, 24-6941, 24-5121, 24-6280, 24-9744
42-6452, 40-5216, 26-4526, 26-6264, 26-4610
42-3114, 26-2108, 28-1062, 41-9995, 24-5461
24-1983, 41-2979, 27-5449, 42-1722, 26-3321
26-0711, 27-7952, 27-5187.

## மரண அறிவித்தல்

### திருமதி

### சங்கரப்பிள்ளை நாகம்மா

காரைநகர் புதுரோட்டைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை நாகம்மா 01- 01- 94 சனிக்கிழமை கொழும்பில் காலமானார் இவர் சிறாப்பர் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், கமலாதேவி, சுந்தரலிங்கம் (ஜேர்மனி), யோகேஸ்வரி (திருமலை), நந்தகுமார் (ஆசிரியர்கொழும்பு), சிவகுமார் (கனடா), வசந்தி ஆகியோரின் அன்புத்தாயாரும் இராசரத்தினம் (ஜேர்மனி), மனோரஞ்சிதம் (ஜேர்மனி), இராசையா (திருமலை), மஞ்சுளா (சுகாதார இலாகா கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற இராசையா (மலேசியா), காலஞ்சென்ற பாக்கியம், தில்லையம்பலம் (சிங்கப்பூர்), பொன்னம்மா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு சகோதரியும், மாணிக்கவாசகரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 2- 01- 94 இன்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்

182/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

இ. கமலாதேவி
(மகள்)

(7116)